Pastoral Letter No/GR/49/2023

# ஆயா் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே!அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

2023 பிப்ரவரி 20-ஆம் தேதி திங்கள்கிழமை நாம் நெற்றியில் சாம்பல் பூசி தவக்காலத்தைத் தொடங்கினோம். தவக்காலம் முடிவடைய இனி சில நாட்களே எஞ்சியுள்ளன. இவ்வேளையில், தவக்காலத்தின் நோக்கங்களான மனம்வருந்துதல், மனமாற்றம், ஒப்புரவு, வாழ்வைப் புதுப்பித்தல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தோமா? எனக் கேள்வி எழுப்புவது சிறந்தது. இனி உள்ள நாட்களை அர்த்தமிக்கதாக செலவிட்டு ஆன்மப் புத்துணர்ச்சி அடைவோம்.

கிறிஸ்தவ வாழ்வின் மையமாக பாஸ்கா நிகழ்வு விளங்குகிறது. இவ்விழாவை தகுந்தத் தயாரிப்புடன் கொண்டாடும் நோக்கத்தில்தான் நாம் ஐம்பது நாட்கள் தவம் மேற்கொள்கிறோம். நம் ஆண்டவர் ஈசோ மெசியாவின் சிலுவைப்பாடுகள், இறப்பு, அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதே பாஸ்கா நிகழ்வு. இதுவே திருவழிபாட்டு ஆண்டின் மிகவும் முக்கியமானக் கொண்டாட்டம். பாவத்தில் விழுந்த மனிதரை மீட்பதற்காகக் கடவுள் வகுத்தத் திட்டத்தின் பகுதியாக பாஸ்கா விளங்குகிறது. இதன் வழியாகவே கடவுள் மனிதருக்கு மீட்பை ஏற்படுத்தினார்.

சாத்தானின் சோதனைக்கு உட்பட்டு மனிதர்கள் பாவத்திற்கு அடிமையாயினர். அதன் வழியாக சாவும் மனிதரைக் கவ்விக்கொண்டது. பாவம் மற்றும் சாவின் பிடியிலிருந்து மனிதரை விடுவிக்க தந்தைக் கடவுள் தமது ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். மகனாகிய மெசியா தமது பாடுகள் மற்றும் சிலுவைப்பலி வழியாக பாவத்திற்குக் கழுவாயாக மாறி, உயிர்த்தெழுதல் வழியாக மனிதருக்கு நிலைவாழ்வை அளித்தார். இவ்வாறாக, மனிதர்கள் சாத்தானின் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கடவுளோடு ஒப்புரவாயினர். இதுவே பாஸ்கா மறைபொருள் என அழைக்கப்படும் மீட்பின் திட்டம்.

ஏப்ரல் 2 ஆம் தேதி, ஓசானா ஞாயிறு கொண்டாட்டங்களுடன் நாம் புனித வாரத்திற்குள் நுழைவோம். பெரிய வியாழன், புனித வெள்ளி, சனி மற்றும் உயிர்ப்பு ஞாயிறு ஆகிய தினங்கள் புனித வாரத்தின் முக்கிய நாட்களாக அமைகின்றன. அன்று, மக்களின் ஆரவார ஒலிகளுக்கு நடுவே, ஆண்டவர் ஈசோ எருசலேம் நகருக்குள் நுழைந்தார். இன்றோ, நாம் இசைக்கும் ஓசானாப் பாடல்களை அவர் ஏற்று நமக்கு அருள்புரிவார். பெசகா வியாழன் அன்று ஈசோ சீடரிடம் “நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்” (யோவா 13.34) என்ற அதே அன்பின் கட்டளையை அவர் இன்றும் நமக்கு அளிப்பார். அதுபோல, புனித வெள்ளியன்று, “தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை” (லூக் 23.34) என்று இயேசு சிலுவையில் தொங்கியவாறு சொல்லிய செபத்தை நாம் இன்றும் கேட்போம். நம்முடைய வெளிக் கண்களுக்கு மறைவாக இருந்தாலும், நம்முடைய அகக்கண்களால் அவரது மாட்சிமிகு உயிர்த்தெழுதலைக் காண்போம். உயிர்த்தெழுந்த ஈசோவின் ஒளி நம்முடைய இதயங்களில் மண்டிக்கிடக்கும் இருளை அகற்றும்.

அன்பான இறைமக்களே, பாவத்தின் வழிகளை விட்டுவிட்டு, கடவுள் நமக்கென காட்டித் தரும் வழியில் பயணிப்போம். அதற்காக இனிவரும் நாட்களை பயன்படுத்திக் கொள்வோம். உயிர்த்தெழுந்த ஈசோவின் அமைதியால் நாம் நமது இதயங்களை நிரப்புவோம். இறைவார்த்தைக்கு செவிமடுத்து, திவ்யநற்கருணை ஆண்டவரை உட்கொண்டு, இதயங்களை நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய புண்ணியங்களால் நிரப்புவோம். சாவை சாவால் வென்று ஈசோ உயித்தெழுந்து மனிதருக்கு மீட்பை அளித்தார். ஈசோவின் உயிர்த்தெழுதல் மக்களுக்கு மீட்பளிக்கும் மாபெரும் நற்செய்தியாக மாறியது. நாம் மேற்கொள்ளும் அனைத்துவிதமானத் திருத்தொண்டுப் பணிகளுக்கும் ஆற்றலின் ஊற்றாக ஈசோவின் உயிர்த்தெழுதல் விளங்குகிறது. புனித பவுல் பின்வருமாறு கூறுகிறார்; “கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்” (1 கொரி 15.14).

உயிர்த்தெழுந்த ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து, உறுதியுடனும் ஆர்வத்துடனும் திருத்தொண்டுப்பணிகளில் ஈடுபடுவோம். 2017-ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ; தக்கலை மறைமாவட்டத்தின் எல்லையை தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி என தமிழ்நாட்டின் மேலும் 8 மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தினார். அன்று முதல், புதிய இடங்களில் திருத்தொண்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. நம்முடைய அருட்தந்தையரும் அருட்சகோதரிகளும் அடிப்படை வசதிகள் கூட இல்லாத இடங்களுக்குச் சென்று வாடகை வீடுகளில் தங்கி திருத்தொண்டுப் பணியை மேற்கொள்ள ஆரம்பித்தனர். கிராமங்களை சந்தித்தல், இறைமக்கள் சமூகத்தை உருவாக்குதல், ஆதரவற்றவர்களுக்கு உதவுதல், மாலைநேர

வகுப்புகள் நடத்துதல், குழந்தைகளுக்கு நன்னெறிப் பயிற்றுவித்தல் போன்ற திருத்தொண்டுப் பணிகளை ஆர்வமுடன் முன்னெடுக்கின்றனர். நமது செபம் மற்றும் இதர உதவிகளின் மூலம் அவர்களுக்கு பக்கப்பலமாய் இருந்து திருத்தொண்டு பணிகளில் நாமும் பங்காளிகளாக மாறுவோம். இது நம்முடைய கடமை என்பதை உணர்ந்து செயல்படுவோம். திருத்தொண்டு பணியிடங்களில் அவர்கள் பலவிதமானச் சவால்களை எதிர்கொள்கிறார்கள். அவர்களுக்கு உதவும் நோக்கத்தில்தான் இந்த ஆண்டு தவக்கால உண்டியல் நமக்குத் தரப்பட்டன. அதில் நீங்கள் மனமுவந்து காணிக்கை அளிப்பதன் வழியாக திருத்தொண்டுப் பணியில் நீங்களும் பங்கேற்கலாம். அவ்வாறாக நற்செய்திப் பணியாளர்களாக நீங்களும் மாறலாம். இம்முயற்சியில் பங்குகளில் செயல்படும் சிறுமலர் இயக்கத்தைச் சேர்ந்தக் குழந்தைகளையும் இணைத்துக் கொள்ள உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் நான் இறைவனை வேண்டுகிறேன். எனக்காகவும் நம்முடைய மறைமாவட்ட வளர்ச்சிக்காகவும் குறிப்பாக திருத்தொண்டு பணிகளுக்காகவும் தொடர்ந்து செபிக்க உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உயிர்த்தெழுந்த ஈசோ மெசியாவின் ஆற்றலும் ஒளியும் உங்கள் குடும்பங்களில் தங்கி இருப்பதாக. அனைவருக்கும் உயிர்ப்புத் திருநாள் நல் வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, இறையாசியும் அளிக்கிறேன்.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்

22.03.2023

BISHOP GEORGE RAJENDRAN sdb ★ Diocese of Thuckalay ★

**✠மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலைமறைமாவட்டஆயர்

---

*குறிப்பு: இவ்* ஆயர் திருமுகத்தை மார்ச் 26, 2023 ஞாயிற்றுக்கிழமை *அனைத்து பங்குகளிலும்* திருப்பலியில் நற்செய்திக்குப்பின் மறையுரைக்குப் பதிலாக வாசிக்கவும்.



Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India